ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-1995) காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

122. 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு வெல்லப்பாகு கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-8-1994-ஆம் நாளிட்ட 134-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. கோரிக்கை எண். 30- ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்)

166. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1995-96 (ஆங்கிலம்).

167. கோரிக்கை எண். 25-கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கையும், திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்)

168. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய சாதனைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

169. மானியக் கோரிக்கை எண். 50-சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (ஆங்கிலம்).